JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **8/2020** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.8** | Prosecution /Defence / Court | |
| Name | **Dr.Prem Navas** | Village | |
| Father's Name | | Taluk | |
| | | Age | |

**A**1 **absent**. **A**2 **present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 04.03.2026**

**முதல் விசாரணை**

**1)** நான் தற்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சென்னையில் குடும்ப நல இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 23.10.2015ம் தேதி மாலை 6.35 மணியளவில் நான் பெருந்துறை அரசு மருத்துவமனையில் முதன்மை குடுமை மருத்துவராக பணிபுரிந்தபோது அய்யாவு என்பவரது மகன் சக்தி வயது 42, கொங்கு காலேஜ் ரோடு, பீரங்கி வீதி என்ற விலாசத்தில் வசிக்கும் நபரை வேலுச்சாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை பரிசோத்தித்த போது அவர் தன்னை 23.10.2015 மாலை 5.30 மணியளவில் மூன்று தெரியாத நபர்கள் தன்னை கற்களால் இடது தோள்பட்டையில், வலது பின் தலையில், இடது காது அருகில் தாக்கியதாக கூறினார்கள். அவர்களுக்கு கீழ் கண்ட காயங்கள் காணப்பட்டன.

2) 1. கிழிந்த காயம் வலது பின் தலையில் 3 x 3 cm 2) கிழிந்த காயம் இடது காது அருகில் 2 x 2 cm 3) ரத்த கட்டு வலது தோள்பட்டையில் 3 x 3 cm. அவரை உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. 24.10.2015 காலை 11.30 மணியளவில் அவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சிடி ஸ்கேன் பார்க்க அனுப்பட்டப்பட்டது. சிடி ஸ்கேன் ரிப்போர்ட் நார்மல். அவருக்கு மறுபடியும் பெருந்துறை அரசு மருத்துவமைனயில் உள்நோயாளியாக அட்மிஷன் வேண்டும் என்று

கேட்டார்கள். 24.10.2015 தேதி மாலை 6.15 மணியளவில் அவருக்கு உள்நோயாளியாக அட்மிஷன் செய்யப்பட்டது. 28.10.2015 மதியம் 1.45 மணியளவில் டிச்சார்ஸ் செய்யப்பட்டார்.

3) அவர் மீண்டும் 02.11.2015 மதியம் 12.55 பெருந்துறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்க்கப்பட்டார். அவர் தனக்கு காது வலி இருப்பதாக கூறினார். 03.11.2015 காலை 9.30 மணியளவில் அவரை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு காது மூக்கு தொண்டை மருத்துவரிடம் ஒப்பினீயனுக்காக அனுப்பப்பட்டார். ஆனால் அவர் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு செல்லவில்லை. 05.11.2015 குகன் ENT ஆஸ்பிட்டல் சிகிச்சை பெற்ற சான்று கொண்டு வந்தார். அதில் அவருக்கு இடது காதில் வலியும், இடது தாடையில் வலியும் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். **விபத்துப்பதிவேட்டுன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** தற்போது முதல் விசாரணை சொல்லியுள்ள சங்கதிகளை போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேன் என்றால் சரிதான். காயச் சான்றிதழை போலீசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்களை போலீசார் இடம் ஒப்படைத்தேன் என்றால் போலீசார் கொண்டு வந்ததன் பேரிலேயே நான் குறிப்பிட்டேன் அவரிடம் ஒப்படைக்கவில்லை. நான் ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பும் போது போலீசாருக்கு ஒவ்வொரு முறையும் தகவல் கொடுப்போம் என்றால் சரிதான். மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாலும் தகவல் கொடுப்போம். எம்ஆர்ஐ ஸ்கேன் எடுப்பதற்காக ஈரோடு மருத்துவமனைக்கு நாங்கள் அனுப்பி வைத்திருந்ததால் உள்நோயாளியாக சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

2) மீண்டும் மருத்துவமனைக்கு காது வலிப்பதாக வந்ததற்கு சிகிச்சை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் நான்

சொல்லியுள்ள காயங்கள் ஒரு நபர் பள்ளத்தில் இருந்து கீழே விழும் போது ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் இறுதி கருத்துரை 05.11.2015 தேதி கொடுத்துள்ளேன். எப்போது விசாரித்தார்கள் என்று தற்சமயம் நினைவில் இல்லை. போலீசார் என்னை ஏழு மாதம் கழித்து 26.05.2016 தேதி தான் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. ஒரு நபர் மயக்கம் ஏற்பட்டு கீழே விழும் போதும் நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள காயங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை